**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051838

1. District மாவட்டம்: Madurai  PS: காவல்நிலையம்: V and AC  Year: ஆண்டு: 2021  FIR No.: மு.த.அ. எண்: 8/2021  Date: நாள்: 09.07.21

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: as amended by
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்: prevention corruption
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : (Amendment) Act 2018.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்: 02.06.21  Date to : நாள் வரை: காலை சுமார் 11.00 hrs
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்: 30.06.21  Time to : நேரம் வரை: நண்பகல் சுமார் 12.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 09.07.2021  Time நேரம் : 08.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 09.07.2021  Time நேரம் : 09.00 hrs.

4. Type of Information : Written/~~Oral~~ :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: வார்டு எண் 93ன் வரி வசூல் மையம் சுமார் 9 கி.மீ. தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி: பாண்டியன் ஹோட்டல் கம்பெனி) அருகே. மண்டலம்-4
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: N.G. சிவராமகாந்த்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: K.P. நடராஜன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 46/2021  (d) Nationality : நாட்டினம்: இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்  (g) Address : முகவரி: 1/D 180 சேக்கிழார் தெரு, அழகப்பன் நகர், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. தேவராஜன், பில் கலெக்டர், வார்டு-93, மண்டலம்-4, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached in separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 9/7/21 | [signature] 9/7/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.07.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.50 hrs.

Name: பெயர் K. Kumaraguru,
Rank: நிலை Inspector of Police, VAAC Madurai. .....No. எண் ..........

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 09.07.2021-ஆம் தேதி மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை, அழகப்பன் நகர், சேக்கிழார் தெரு, கதவு எண் 1/D, 180-லில் வசிக்கும் K.P.நடராஜன் மகன் திரு. N.ஈஸ்வரபிரசாத் என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் N.ஈஸ்வரபிரசாத், த/பெ K.P.நடராஜன்,1/ D 180 சேக்கிழார் தெரு, அழகப்பன் நகர், மதுரை. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை அழகப்பன் நகரில் எனது பெற்றோர், மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் எந்திரவியல் பிரிவில் முனைவர் பட்டம் பெற்றுள்ளேன். தற்போது தனியார் நிறுவனத்தில் பொறியாளராக பணியாற்றுகிறேன். அழகப்பன் நகரில் நாங்கள் குடியிருக்கும் எனக்குச் சொந்தமான வீட்டின் ஒரு பகுதியில் இரண்டு சிறிய கடைகள் கட்டி, ஒன்றில் திரு.சங்கரநாராயணன் அவர்களுக்கு பலசரக்கு கடை வைக்கவும் மற்றொன்றில் திரு.சலீம் அவர்களுக்கு மெக்கானிக் கடை வைத்து நடத்த வாடகைக்கு விட்டிருக்கிறேன். அதற்கு எதிரில் எனது தந்தை திரு.நடராஜன் மற்றும் அம்மா திருமதி.பரிமளம் பெயரில் உள்ள காலி மனையிடத்தில் ஒரு ஷெட் கட்டி அதனை டெக்கரேஷன் பொருட்கள் வைக்கும் குடோனாக திரு.ரமேஷ் அவர்களுக்கு வாடகைக்கு விட்டிருக்கிறோம். மேற்கண்ட 2 கடைகளுக்கும், குடோனுக்கும் மாநகராட்சியில் உரிமம் பெற்று அதற்கு கட்டிட வரியும் கட்டி வருகிறோம். தற்போது மேற்கண்ட 2 கடைகள் மற்றும் குடோனில் வியாபாரம் செய்பவர்களின் பெயரில் தொழில் வரி கட்டுவதற்கு திட்டமிட்டு அதற்காக மாநகராட்சி மண்டலம் எண் 4-ல் உள்ள எங்கள் பகுதி பாண்டியன் கேஸ் கம்பெனி அருகில் உள்ள வார்டு எண் 93-ன் வரி வசூலிக்கும் மையத்தில் பணியாற்றும் பில் கலெக்டர் திரு.ஜெயராமன் என்பவரை அவரது அலுவலகத்தில் 02.06.2021-ம் தேதி சுமார் காலை சுமார் 11:00 மணியளவில் நேரில் சந்தித்து இதுகுறித்து கேட்ட போது அவர் என்னிடம் சிறிய கடைகள் இரண்டுக்கும் அரசு

நிர்ணயம் செய்துள்ளபடி அரையாண்டு வரியாக ஒவ்வொரு கடைக்கும் ரூ.170/-ம், பெரிய குடோனுக்கு சுமார் 400 ரூபாயும் வரி நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கும் என்று சொன்னார். தொடர்ந்து அவர் சொன்னபடி தொழில் வரி நிர்ணயம் செய்வதற்கு ஒவ்வொரு கடைக்கும் ரூ.1,500/- வீதம் மொத்தம் ரூ.4,500/- தனது செலவுக்கு தர வேண்டும் என்றும் கூறினார். பின்னர் தொடர்ந்து நான் மாநகராட்சி தொழில் வரி விண்ணப்பப் படிவங்கள் 3 வாங்கி எனது பெயரில் 2 கடைகளுக்கும், எனது அம்மா பெயரில் குடோனுக்கும் வரி நிர்ணயம் செய்யுமாறு படிவத்தை நிரப்பி, கடைகளுக்குரிய படிவத்தில் நானும், குடோனுக்குரிய படிவத்தில் எனது அம்மாவும் கையெழுத்திட்டு அன்றைய தினமே திரு.ஜெயராமன் அவர்களிடம் கொடுத்தேன். அவர் என்னிடம் கடை உரிமையாளர் பெயரில் தொழில் வரி நிர்ணயம் செய்யக்கூடாது, கடை நடத்துபவரின் பெயரில்தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று கூறியதன் பேரில், நான் விண்ணப்பப் படிவத்தில் எழுதியிருந்த எனது பெயரையும், என் அம்மா பெயரையும் ஒயிட்னர் வைத்து அழித்து விட்டு அதற்கு பதிலாக, மெக்கானிக் கடை நடத்தும் திரு.சலீம் பெயரையும், பலசரக்கு கடை நடத்தும் திரு.சங்கரநாராயணன் பெயரையும், மற்றொரு படிவத்தில் குடோன் வைத்துள்ள திரு.ரமேஷ் பெயரையும் அப்போதே எழுதிக் கொடுத்தேன். அவர் படிவங்களைப் பெற்ற பின்னர் நான் கேட்ட பணம் ரூ.4,500/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவ்வளவு பணம் தற்போது என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால்தான் வேலை முடியும் என்று சொல்லி படிவங்களை வாங்கி வைத்துக் கொண்டார். நான் அவரிடம் முதலில் வேலையை முடியுங்கள் பின்னர் பணம் பற்றி பேசிக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். பின்பு மேற்படி சம்பவங்கள் சம்பந்தமாக சம்மந்தப்பட்ட வாடகைதாரர் திரு.சலீம் திரு.சங்கரநாராயணன் மற்றும் திரு.ரமேஷ் ஆகியோரிடம் சொன்னேன். இந்நிலையில், கடந்த 29.06.2021-ம் தேதியன்று நான் கொடுத்த 3 விண்ணப்பப் படிவங்களையும் மாநகராட்சி ஒப்புதல் செய்து விட்டதாக எனது மொபைல் எண்ணுக்கு தனித்தனியாக 3 குறுஞ்செய்திகள் வந்தன. எனவே, நான் 30.06.2021-ம் நண்பகல் சுமார் 12.30 மணியளவில் திரு.ஜெயராமன் அவர்களை மீண்டும் அவரது

அலுவலகத்தில் நான் மெக்கானிக் கடை வைத்திருக்கும் சலீம் என்பவருடன் சென்று நேரில் சந்தித்து மெசேஜ் வந்த விவரத்தைக் கூறி தொழில் வரி கட்டிவிடவா சார் என்று கேட்டேன். அப்போது அவர் என்னிடம் தான் ஏற்கனவே சொன்னபடி பலசரக்கு கடைக்கும், மெக்கானிக் கடைக்கும் அரையாண்டு வரி ரூ.168/- நிர்ணயம் செய்துள்ளதாகவும், குடோனுக்கு ரூ.405/- நிர்ணயம் செய்துள்ளதாகவும், 2020-2021 நிதியாண்டின் இரண்டாவது அரையாண்டுக்கும், 2021-2022-க்கு முதல் மற்றும் இரண்டாவது அரையாண்டுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.2,223/- கட்ட வேண்டும் என்று விவரம் சொல்லி சிறிய பேப்பரில் எழுதிக் கொடுத்தார். நான் அவர் சொன்னபடி ரூ.2,223/-ஐ அவரிடம் கொடுத்த போது அவர் அதை என்னிடம் திருப்பிக் கொடுத்து விட்டு முதலில் எனக்குரிய ரூ.4,500/-ஐ கொடுத்து விட்ட அதன் பின்னர் தொழில் வரி கட்டுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் நீங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளது, தற்போது கொரோனா லாக்டவுண் காரணமாக வியாபாரம் சரியில்லாததால் நான் கடை வைத்திருப்பவர்களிடம் இவ்வளவு பணம் கேட்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் பலசரக்கு கடைக்கும், மெக்கானிக் கடைக்கும் தலா 1,000/- ரூபாய் வீதம், 2,000/- ரூபாயும், பெரிய குடோனுக்கு ரூ.2,000/-மும் சேர்த்து மொத்தம் ரூ.4,000/-ம் கொடுங்கள், உங்களுக்காக நான் 500/- ரூபாய் குறைத்துக் கொள்கிறேன் என்று கூறினார். நான் கேட்ட பணம் ரூ.4,000/-ஐ கொடுத்தால் தான் Professional tax assessment நம்பரை பெற்று தர ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார், நானும் சரி என்று வந்துவிட்டேன். பின்னர் மேற்படி சம்பவத்தினை எனது வாடகைதாரர்களிடம் சொன்னேன். கொரானா காலம் கடையை நடத்த முடியவில்லை அவருக்கு எப்படி பணம் கொடுக்கமுடியும் என்று கூறி வருத்தப்பட்டனர். பின்பு அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறினார்கள். பின்னர் கொரானா காலத்தில் கடையை திறக்க முடியாத சூழ்நிலை இருந்ததாலும், பணம் கையில் இல்லாததாலும் நேற்றுதான் பில் கலெக்டர் திரு.ஜெயராமன் கேட்ட லஞ்ச பணம் ரூ.4,000/-யை என்னிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். எனக்கும் அவருக்கு லஞ்சம்

கொடுப்பதற்கு விருப்பமில்லை. சட்டப்படி அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் தொழில் வரி நிர்ணயம் செய்து Professional tax assessment நம்பரை பெற்று தர ஏற்பாடு செய்ய ரூ.4,000/- லஞ்சம் கேட்கும் திரு.ஜெயராமன், பில் கலெக்டர், வார்டு எண் 93, மதுரை மாநகராட்சி அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் திரு.ஜெயராமன் எங்கள் கடைக்கு நிர்ணயம் செய்துள்ள வரி விவரத்தை எழுதிக் கொடுத்த சிறிய துண்டுச் சீட்டையும், எனக்கு வந்த 3 குறுஞ்செய்திகளின் பிரிண்ட் அவுட்டையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, **Sd./-XXXXXX(N. ESWARAPRASATH) 9/7/21.**

**Sir, received the written complaint on 09.07.2021 at 08.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 8/2021 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs and took up investigation.** Sd./-XXXXXX **(K.Kumaraguru) 9.7.2021, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original written complaint of Tr. N.Eswaraprasath, S/o. K.P.Natarajan, 1/D180, Sekilar Street, Alagappan Nagar, Madurai, slip and print out of the SMS are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

9/7/2021

**(K. Kumaraguru)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**